DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.240/2025

PW - 1

| | | |
|---|---|---|
| Name | : | சுகண்யா (Lw - 1) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(**எதிரி ஆஜர்**)**

**BNSS** பிரிவு **348-**ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை **Date : 21.04.2026**

எனக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 19.10.2025ம் தேதி நடைபெற்றது. நான் எதிரி மீது சேந்தமங்கலம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தற்கு பின்னிட்டுதான் எனக்கு திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். நான் எப்போது வங்கியில் வேலைக்கு சேர்ந்தேன் என்றால் 14.07.2014ம் தேதியில். எதிரியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் நாங்கள் இருவரும் 2009ம் ஆண்டு வரை ஒரே பள்ளியில் படித்தால் தெரியும். நானும் எதிரியும் வேறு வேறு ஊர்களில் வேறு வேறு கல்லூரிகளில் படித்தோம் என்றால் நான் படித்த கல்லூரியில் எதிரி படிக்கவில்லை.

பள்ளி முடித்து எத்தனை காலம்வரை நானும் எதிரியும் பழக்கத்தில் இருந்தோம் என்றால் எனக்கு நினைவில் இல்லை பள்ளியிலேயே 4 – 5 முறைதான் பேசி இருப்பேன். பின்பு 2018ம் ஆண்டு முதல் 2023வரை எதிரி அவ்வபோது என்னிடம் பேசி வந்தார். திருச்சியில் எதிரியுடன் எப்போது எனக்கு பிரச்சணை ஏற்பட்டது என்றால் 2024ம் வருடம் பிப்ரவரி மாதத்தில் ஏற்பட்டது. 2018ம் ஆண்டு முதல் 2023ம் ஆண்டு வரை நானும்

எதிரியும் காதலித்து வந்தோமா என்றால் இல்லை. எனக்கும் எதிரிக்கும் இடையே எந்த காலத்திலும் காதல் இருந்தது இல்லை என்றால் இல்லை. நானும் எதிரியும் பேஸ்புக் மற்றும் வாட்ஸ்அப் ஆகியவற்றில் எதிரி என்னை விரும்புவதாக கூறினார் என்றாலும் நான் அதற்கு சம்மதம் தெரிவித்தேன் என்றாலும் 2022 செப்டம்பர் 4ம் தேதி நான் எதிரிக்கு போன் செய்து அவரை எனக்கு பிடித்திருப்பதாகவும், அவரை திருமணம் செய்யும் என்னத்தில் இருப்பதாகவும் கூறினேன் என்றால் எனக்கு நினைவில் இல்லை. எனது பெற்றோர் சம்மதிக்கும் பட்சத்தில் நான் சம்மதிக்கிறேன் என்றுதான் கூறி வந்தேன். எனக்கு எதிரியை திருமணம் செய்துகொள்ள சம்மதம் என்றாலும் எனது பெற்றோருக்குத்தான் எதிரியை பிடிக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் எதிரியிடம் எனது பெற்றோர் சம்மதித்தால் நான் சம்மதிக்கிறேன் என்று மட்டும்தான் சொல்லி வந்ததேன்.

நான் இந்த புகார் கொடுப்பதற்கு முன்பு எதிரியை பற்றி எங்கும் புகார் கொடுத்ததில்லை என்றால் சரிதான். போலிசாரிடம் கொடுக்கவில்லை. எதிரியின் பெற்றோர் மற்றும் அவரது ஊர் பெரியவர்களிடம் நான் முறையிட்டேன். அவ்வாறு நான் எங்கும் முறையிடவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அவ்வாறு நான் முறையிட்டு எதிரி தொடர்ந்து என்னை அனுகி இருந்தால் நான் போலிசாரிடமே புகார் அளித்திருப்பேன் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு பரிசுபொருட்கள் வாங்கி கொடுத்தாரா என்றால் ஒருமுறை எனது வங்கியில் எனது டேபிலில் கொண்டுவந்து பரிசு பொருளை வைத்துவிட்டார். நான் எடுத்து குப்பைத்தொட்டியில் போட்டுவிட்டேன். நான் குப்பைத்தொட்டியில் போடவில்லை என்றாலும் மேற்படி பரிசுபொருளை புகைப்படம் எடுத்து எதிரிக்கு எனக்கு எதற்கு இவ்வளவு விலை உயர்ந்த பரிசுபொருள் என்று கூறி பின்னிட்டு Thanks சொன்னேன் என்றால் எனக்கு நினைவில் இல்லை. நான் குப்பைத்தொட்டியில் போட்டிருந்தால் Thanks சொல்லி இருக்கமாட்டேன் என்றால் சரியல்ல.

நான் என்னை செல்பி புகைப்படம் எடுத்து எதிரிக்கு அடிக்கடி அனுப்பி வந்தேன் என்றால் எப்போதாவது அனுப்புவேன். நான் எதிரியுடன் நள்ளிரவு போனில் சேட் செய்துள்ளேன் என்றால் சில நாட்களில் செய்துள்ளேன். நான் என்னுடைய ஆண் நண்பர்களுக்கு வழக்கமாகவே போட்டோ அனுப்பியும் நள்ளிரவில் போனில் சேட் செய்வேனா என்றால் இல்லை.

நான் வேலைசெய்த கோயமுத்தூர் அன்னூர், இராசிபுரம், திருச்சி மற்றும்

சேந்தமங்கலம் வங்கி கிளைகள் அனைத்திற்கும் சுமார் 5 முதல் 6 வருடம் வரை எதிரி வந்து என்னை சந்தித்தார் என்றால் சரிதான். மேற்படி எதிரி குறித்து நான் எனது வங்கியின் உயர் அதிகாரிகளிடம் புகார் தெரிவித்தேனா என்றால் இல்லை.

பள்ளி முடித்ததற்கு பின்பு 2010ம் வருடம் வரை நான் எதிரியுடன் பேசி வந்தேன் என்றாலும் அதன் பின்னிட்டு நான் சில காலம் பேசாமல் இடைவெளியில் இருந்தேன் என்றால் எனக்கு நினைவில் இல்லை. 2018 ஜீன் முதல் 2019 ஜனவரி மாதம் வரை நான் எதிரியுடன் பேசி வந்து பின்னிட்டு எங்களுக்குள் இடைவெளி வந்தது என்றால் எனக்கு நினைவில் இல்லை. பின்னிட்டு 2019 ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரை நான் எதிரியுடன் பேசிவந்து மீண்டும் எங்களுக்குள் இடைவெளி ஏற்பட்டது என்றாலும் 2021 மே முதல் 2021 ஆகஸ்ட் மாதம் வரை நான் எதிரியுடன் பேசி வந்து மீண்டும் எங்களுக்குள் இடைவெளி ஏற்பட்டது என்றால் எனக்கு நினைவில்லை. பின்பு 2022 ஜீன் மாதம் முதல் நானும் எதிரியும் பேசி வந்தோம் என்றால் சரிதான்.

நான் ஒவ்வொரு முறையும் எதிரியுடன் காதலர் போல தொடர்ந்து சிலகாலம் பேசிவிட்டு சிலகாலம் இடைவெளி இருந்து வந்தது என்றால் சரியல்ல எதிரியுடன் பேசி வந்தேன். நான் எதிரியுடன் பேசிவந்த தோரணையில் வேறு யாரிடமேனும் பேசியுள்ளேனா என்றால் இல்லை. எதிரி என்னை திருமணம் செய்யவேண்டும் என நல்லமுறையில் பேசிவந்ததால் பேசி வந்தேன்.

கடந்த 04.10.2024ம் தேதி ஆஜர் எதிரி எனது வங்கிக்கு வந்து எனது அறைக்குள் அத்துமீறி உள்ளே நுழையவோ, சத்தம்போடவோ அல்லது ஏதேனும் தள்ளு முள்ளு செய்தாரா என்றால் எனக்கு நினைவில் இல்லை. நான் எனது முதல் விசாரணையில் சொன்னதுபோல சம்பவம் எதுவும் எந்த தேதியிலும் நடக்கவில்லை என்றால் சரியல்ல நடந்துள்ளது. எதிரி எந்த தேதியில் அவ்வாறு நடந்துகொண்டார் என்றால் எனக்கு நினைவில் இல்லை. நான் எனது வங்கியில் வங்கி மேலாளர் என்றால் சரிதான். எனது வங்கியில் சி.சி.டி.வி. கேமரா உட்பட அனைத்து ஆவணங்களும் எனது பொறுப்பில் உள்ளவை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல சம்பவம் நடந்திருந்தால் தேதியை குறிப்பிட்டு கூறியிருப்பேன் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

நான் எதிரி எனது வங்கிக்கு வந்தபோது எப்போதும் பிற நபர்களை அழைத்து அவரை வெளியேற்ற கூறியது இல்லை என்றால் சரியல்ல ஒரு முறை நடந்தது. எந்த தேதியில் நடந்தது என்றால் எனக்கு நினைவில் இல்லை. எதிரியை யார் எனது கேபினில்

இருந்து வெளியே கூட்டி சென்றார் என்றால் அட்டன்டர் குமார் என்பவர் கூட்டி சென்றார். குமார் எதிரியை எந்த முறையில் வெளியே கூட்டி செல்வார் என்றால் குமார் எதிரியிடம் வெளியே செல்லுமாறு Request செய்வார் எதிரி வெளியே சென்றுவிடுவார். சில சமயங்களில் எதிரி வெளியே செல்ல மறுத்துள்ளார். நான் அவ்வாறு எதிரியை எந்த காலத்திலும் வெளியே அனுப்பியது இல்லை என்றாலும் அவ்வாறு அனுப்பி இருந்தால் வங்கியில் சி.சி.டி.வி. கேமரா பதிவுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. கடந்த 04.10.2024ம் தேதியில் எதிரி எனது கேபினுக்கு வெளியே 3 மணிநேரம் உட்கார்ந்துவிட்டு பின்பு எனது கேபினுக்கு வந்து 1/2 மணி நேரம் பேசிவிட்டு எந்த ஒரு கட்டாயப்படுத்தலும் இல்லாமல்தான் வெளியே சென்றார் என்றால் எனக்கு நினைவில் இல்லை. எதிரி உண்மையில் என்னிடம் பிரச்சனை செய்திருந்தால் அன்றைய தினமே நான் காவல்நிலையத்தில் புகார் அளித்திருப்பேன் என்றாலும் எதிரி என்னிடம் பிரச்சனை செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகாரை நான் எழுதவில்லை என்றால் சரிதான். எனது அக்கா எழுதினார். எனது அக்கா சட்டபடிப்பு படித்து முடித்துள்ளார் என்றால் சரிதான். நான் சம்பவம் நடந்த உடனேயே எனது பெற்றோர் மற்றும் எனது அக்காவிற்கு தகவல் தெரிவித்தேனா என்றால் தெரிவித்துவிட்டேன். நான் 31.05.2025ம் தேதி சம்பவம் நடந்து 2 நாட்கள் கழித்து புகார் அளித்தேன் என்றால் சரியல்ல. நான் அன்றைய தினமே புகார் அளித்துவிட்டேன். நான் சொல்வதுபோல 29.05.2025, 30.05.2025 மற்றும் 31.05.2025 ஆகிய தேதிகளில் சம்பவம் ஏதும் நடக்கவில்லை என்றாலும் அவ்வாறு நடந்திருந்தால் எனது அக்கா சட்டபடிப்பு முடித்தவர் என்பதால் உடனடியாக நான் காவல்நிலையத்தில் புகார் அளித்திருப்பேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ1 புகாரை நான் படித்து பார்த்தேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகாரில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். எனது புகாரில் உள்ள சங்கதிகளும் நான் முதல் விசாரணையில் உள்ள சங்கதிகளும் முற்றிலும் முறணாக உள்ளதால் அ.சா.ஆ.1 புகாரானது பொய்யான புகார் என்றால் சரியல்ல.

30.05.2025ம் தேதி எதிரி எனது வீட்டிற்கு வந்திருந்தார் என்றால் உடனடியாக நான் காவல்நிலையத்தில் புகார் அளித்திருப்பேன் என்றாலும் எதிரி அவ்வாறு வராததால் தான் நான் புகார் அளிக்கவில்லை என்றாலும் சரியல்ல. போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் புகார் கொடுத்த அன்றே விசாரித்தார்கள். பின்னிட்டு போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் மற்ற

சாட்சிகளிடம் போலிசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் 2 – 3 நாட்கள் கழித்து வங்கிக்கு வந்து போலிசார் அவர்களை விசாரித்தார்கள். போலிசார் வங்கியில் வந்து விசாரித்ததற்கான சி.சி.டி.வி. கேமரா பதிவுகள் உள்ளதா என்றால் வங்கியில் இருக்கும் சாட்சி மீண்டும் தான் சேந்தமங்கலம் காவல்நிலையத்தில் எதிரி மீது 08.10.2024ம் தேதி கொடுத்த புகாரை போலிசார் வங்கிக்கு வந்து விசாரித்ததாகவும், இந்த வழக்கில் போலிசார் வங்கிக்கு வந்து விசாரிக்கவில்லை என்றும் காவல்நிலையத்திற்கு அழைத்து விசாரித்தார்கள் என சாட்சியம் அளிக்கிறார்.

போலிசார் காவல்நிலையத்தில் வைத்துதான் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்ததற்கு பின்னிட்டு எழுதிக்கொண்டு என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். போலிசார் அவ்வாறு என்னிடம் கையொப்பம் எதுவும் பெறவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது வங்கியில் பணிபுரியும் நபர்களின் விபரம் குறித்து போலிசார் என்னிடம் போனில் கேட்டுகொண்டார்கள் என்றால் சரிதான்.

எதிரி எனது அறைக்கு வெளியே அமர்ந்துகொண்டிருந்தபோதே போலிசாருக்கு நான் போன் செய்து அவர்கள் வங்கிக்கு வந்து எதிரியை அழைத்து சென்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல எதிரி வெளியே அமர்ந்துகொண்டிருந்தபோது நான் போலிசாருக்கு தகவல் சொல்லிவிட்டு நான் எனது அறைக்குள் சென்றுவிட்டேன். அப்போது எனது அறையில் வேறு வாடிக்கையாளர் அமர்ந்திருந்தால் எதிரி எனது அறைக்குள் வரமாட்டார் என நினைத்திருந்தேன் ஆனால் எதிரி எனது அறைக்குள் வந்தார் பின்பு போலிசார் அங்கு வந்து எதிரியை கூட்டி சென்றுவிட்டார்கள். எதிரி எனது அறைக்கு வெளியே அமர்ந்திருந்த போதே போலிசார் வங்கிக்கு வந்து எதிரியை வங்கிக்கு வெளியே அழைத்து சென்றுவிட்டு பின்னிட்டு போலிசாரும் எதிரியும் எனது அறைக்கு வந்து என்னிடம் பேசினார்கள் என்றால் சரியல்ல. எதிரி எனது கேபினுகுள் வந்து எனது கையை பிடிக்க முயற்சித்தார் சாட்சி சாந்தகுமார் அப்போது அங்கு வந்து எதிரியை தடுத்தார் அப்போது போலிசார் அங்கு வந்து எதிரியை அழைத்து சென்றுவிட்டார்கள். எதிரி எனது கையை பிடிக்கவில்லை என்றால் சரியல்ல.

நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் அவ்வாறு நடந்திருந்தால் வங்கியின் சி.சி.டி.வி. பதிவுகளை நான் போலிசாரிடமோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. போலிசார்தான் எதிரியை கூட்டி சென்றார்கள் என்றாலும் சாந்தகுமார் கூட்டி

செல்லவில்லை என்றாலும் சரிதான். நான் சொல்வதுபோல பிரச்சனை எதுவும் நடந்திருந்தால் அங்கு போலிசார் இருந்ததால் நான் உடனடியாக போலிசாரிடம் புகார் அளித்திருப்பேன் என்றாலும் நான் சொல்வதுபோல சம்பவம் நடக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் எனது புகார் வாக்குமூலத்திலும், முதல் விசாரணையிலும் முன்னுக்கு பின் முறணாக கூறியுள்ளேன் என்றாலும் எதிரியை வழக்கில் சிக்கவைக்கவேண்டும் என்பதற்காக எதிரிமீது பொய்யாக புகார் கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது எந்த எந்த போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் எனக்கு நினைவில் இல்லை. நான் புகார் அளித்ததற்கு பின்னிட்டு எனக்கு திருமணம் ஆகிவிட்டதால் என் மீதான தவறை மறைப்பதற்காக வேண்டி எதிரி மீது கூடுதலாக பொய்யான சங்கதிகளை கூறி முதல் விசாரணையில் சாட்சியம் அளித்தேன் என்றால் சரியல்ல.

எதிரியிடம் நான் தொடர்ந்து எதிரியை நான் காதலிப்பதுபோல பேசிவந்தும் திடீர் என மாத கணக்கிலும் வருட கணக்கிரும் பேசாமல் இருந்து வந்ததால் எதிரி குழப்பத்தில் இருந்தார் என்றால் சரியல்ல. என்னால் தான் எதிரி அவருடைய Carreerஐ இழந்துவிட்டு கடுமையான மன உலைச்சலுக்கு உள்ளானார் என்றால் சரியல்ல. எதிரி என்னை பார்க்க வரும்பொருட்டு அவர் ஹதராபாத்தில் பார்த்துகொண்டிருந்த வேலையை விட்டுவிட்டு வந்தார் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு கொடுத்த மன உலைச்சலின் காரணமாகத்தான் எதிரி கடந்த 4 வருடங்களாக எந்த வேலைக்கும் செல்லாமல் மன உலைச்சலில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. என்னால் தான் எதிரியின் பெற்றோரும் நோய்வாய்பட்டு மன உலைச்சலுக்கு ஆளானார்கள் என்றால் சரியல்ல. நான் எதிரியை பற்றி ஊர் பெரிவர்களிடம் உண்மையில் முறையிட்டு இருந்தால் அவர்களுடைய பெயர்கள் குறித்து குறிப்பிட்டு கூறியிருப்பேன் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**